# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அநுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 6,981 — 1918 ம் ௵ கார்த்திகை ௴ 29 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV. — நான்காம் பாகம்.

### தேசாதிபதியவர்களால் பிரசித்தம்.

பெரிய பிரித்தானியாவும் அயர்லந்தும் சேர்ந்த ஐக்கிய இராட்சியத்துக்கும் கடல்களுக்கப்பாலுள்ள ஆதிபத்திய நாடுகளுக்கும் அரசரும் சமயபரிபாலகரும் ஆகிய மகத்துவநாயக ஐந்தாம் ஜோர்ஜ் அவர்களின் நாமத்தினாலே:

மகாகீர்த்தி பொருந்திய சென்ற் மைக்கேல் சென்ற் ஜோர்ஜ் என்னும் வரிசையின் நயிற் கொம்மாண்டர் என்னும் பட்டவர்த்தனரும், பிறிட்டிஷ் இராணுவ மகா மகிமைவாய்ந்த நயிற் கொம்மாண்டர் என்னும் பட்டவர்த்தனரும், மகா கௌரவம்பொருந்திய பாத் வரிசையின் கொம்பானியன் என்னும் பட்டவர்த்தனரும், இலங்கைத்தீவுக்கும் அதனைச்சார்ந்துள்ள நாடுகளுக்கும் தேசாதிபதியும் சேனாதிபதியுமாகிய உத்தமனார் சேர் உவிலியம் ஹென்றி மெனிங் அவர்களால் செய்யப்படும்

### விளம்பரம்.

டபிள்யு. எச். மெனிங்.

சிலாவப் பாடசாலைச் சங்கத்தவர்கள், 1907 ம் ஆண்டின் 8 ம் இலக்க நாட்டுப்புறத்து பாடசாலைச் சட்டத்தின் 19 ம் 20 ம் பிரிவுகளினால் தங்களில் கொடுக்கப்பட்ட தத்துவத்தைக்கொண்டு சில உபவிதிகளை யுண்டாக்கி அவ்விதிகள் இலங்கைத் தேசாதிபதியால் மேற்படி சட்டத்தின் 20 ம் பிரிவின் 2 ம் கீழ்ப்பிரிவினால் தமக்குக் கொடுக்கப்பட்ட தத்துவத்தைக்கொண்டு அதிகார மந்திரசபையாரது ஆலோசனைச்சபையில் அங்கீகரிக்கப்பட்டு 1910 ம் ஆண்டு சித்திரை மாதம் 19 ந் திகதியின் விளம்பரத்தினால் அவ்வருஷம் அம்மாதம் 22 ந் திகதியின் 6,367 ம் அரசாட்சியாரின் "கெசற்" பத்திரிகையில் வெளியரங்கப் படுத்தப்பட்டபடியினாலும்:

மேற்படி பாடசாலைச் சங்கத்தவர் 1917 ம் ஆண்டின் 34 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தினால் திருத்தப்பட்ட, மேற்படி 1907 ம் ஆண்டின் 8 ம் கட்டளைச்சட்டத்தின் 20 ம் பிரிவின் கீழ்ப்பிரிவு (1) (b) யின் பிரகாரம் மேற்படி சொல்லப்பட்ட உபவிதிகளின் 2 ம் உபவிதியைத் திருத்தியும் மேற்படி சொல்லிய சட்டளைச்சட்டத்தினால் திருத்தப்பட்டபடியான 20 ம் பிரிவின் கீழ்ப்பிரிவு (1) (a) யின் பிரகாரம் 7 ம் இலக்கத்தைக் கொண்ட ஓர் உபவிதியை மேற்குறித்த உபவிதிகளுடன் சேர்த்துமிருக்கிறபடியினாலும்.

சகலருமறியவேண்டிய தென்னவானால், இலங்கைத்தீவின் தேசாதிபதியாகிய நாம், எமக்கு மேற்சொல்லிய சட்டத்தின் 20 ம் பிரிவின் 2 கீழ்ப்பிரிவினால் கொடுக்கப்பட்ட தத்துவத்தைக் கொண்டும் அதிகார மந்திர மபையாரது ஆலோசனையுடனும் மேற்கூறிய 2 ம் உபவிதியைக் கீழே விபரித்திருக்கிற பிரகாரம் திருத்துவதையும், இன்னுங் கீழே விபரித்திருக்கிற பிரகாரம் 7 ம் இலக்கத்தையுடைய உபவிதியைச் சேர்ப்பதையும் இத்தால் உறுதிப்படுத்துவ்டுகின்றோம்.

எங்கள் ஆண்டவரின் வருஷம் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு கார்த்திகைமாதம் இருபத்தொராந்திகதியில் இலங்கைத்தீவிற் கொழும்பில் கொடுக்கப்பட்டது.

உத்தமனார் கட்டளைப்படி,

ஆர். ஈ. ஸ்றப்ஸ்,
கலோனியல் சக்கிறத்தார்.

கடவுள் அரசரைக் காத்தருளுக.

### சொல்லிய மாற்றங்கள்.

1. மேற்கூறிய 2 ம் உபவிதியைப் பின்வருமாறு மாற்றவேண்டும்: ஆறு வயதிற் குட்படாததும் பதினாலு வயதிற்கு மேற்படாததுமான ஒவ்வொரு பையனினதும், மகமதிய பெண்பிள்ளை யல்லாத ஆறுவயதிற் குட்படாததும் பன்னிரண்டு வயதிற்கு மேற்படாததும் அல்லது தமிழ்ப் பெண்பிள்ளையாயிருந்தால் ஆறுவயதிற் குட்படாததும் பத்து வயதிற்கு மேற்படாததுமான ஒவ்வொரு பெண்பிள்ளையினதும் பெற்றோர் அப்பையனை அல்லது பெண்பிள்ளையைக்

கீழேகாணு மட்டவணையிற் கூறிய பள்ளிக்கூடத்தி லொன்றிற்கு அல்லது பிள்ளையின் வீட்டிலிருந்து மூன்று கட்டைக்குள்ளாக வேறே பிரிவிலாவதிருக்கு மொரு பள்ளிக்கூடத்திற் கனுப்பிவைக்கவேண்டும். ஆனால் அப்பிள்ளையின் கல்விப் பயிற்சிக்கேற்ற வேறு தகுந்த ஒழுங்குகளைப்பண்ணியிருந்தால் அல்லது அப்பிள்ளை பள்ளிக்கூடத்திற்குப் போகாமல்விடுவதற்குப் போதிய ஞாயமிருந்தால் பிள்ளையைப் பள்ளிககூடத்திற் கனுப்பவேண்டியதில்லை. அன்றியும் பன்னிரண்டு வயதிற்கு மேற்பட்ட பையன்களுக்கு வேளாண்மைசெய்யுங்காலத்தில் அல்லது வேறு ஞாயமான காரணத்திற்காக பள்ளிக்கூடத்திற்கு வராமலிருக்கச் சொற்ப காலத்திற்குச் சங்கத்தலைவர் உத்தரவு கொடுககலாம்.

7. (2) பின்வரும் உபவிதியைச் சேர்த்து 7 ம் இலக்கமிட்டுக்கொள்ளுக :—முன் பள்ளிக்கூடமாகப் பாவிக்கப்படாத ஒரு அறையில் அல்லது கட்டிடத்தில் ஓர் புதிய பள்ளிககூடத்தைத் துவக்க அல்லது பள்ளிக்கூடத்திற்குப் போகும் வயதுள்ள பிள்ளைகளுக்கு இங்கிலீசில் அல்லது வேறெந்தப் பாஷையிலாவது படிப்பூட்ட விரும்புவர் தாம் அப்படிச்செய்யத் துவங்குவதற்கு ஆகக்குறைந்த காலமாகிய ஒரு மாதத்திற்கு முந்தியாவது தம்மூருக்கு ஆககிட்டவாயுள்ள பள்ளிக்கூடச் சோதனைக்காறன் அல்லது கீழ்ச் சோதனைககாறனுக்கு அறிவிககவேண்டும். அதன்பின் தம் மாணவரின் வகுப்புகளைப் பற்றியும் தாம் அவர்களுக்குக் கற்பிக்கவிருக்கும் கல்வியைப்பற்றியும் வேண்டிய விபரங்களை வித்தியாகர்த்தருக் கறிவிக்க வேண்டும்.

மேற்கூறிய திருத்தங்களும் புதுப் பிரமாணமும் சலாபப்பகுதிப் பள்ளிக்கூடச் சங்கத்தவரால் 1918 ம் ஆண்டு தைமாதம் 30 ந் தேதி கூடிய சபையில் அங்கிகரிக்கப்பட்டன.

டபிள்யு. ஈ. வெயிட்,
சங்கத்தலைவர்.

---

*அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.*

---

1876 ம் ஹு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் டிவுலபிற்றியாவிலிருக்கும் பிரசித்த பூக்தோட்டம் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடம் இல. 16,852. குறிச்சி—டிவுலபிற்றியா.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | டெல்ககவத்த .. | 2 தென்னமரங்களுள்ள தோட்டம் | பி. புருன்சிஹு பெரஹுண்டோ .. | 0 | 0 | 21·4 |
| 2 | இக்ககவத்த .. | தென்னைகளும் மற்றவையுமுள்ள தோட்டம் .. | டொன் கொன்ஸ்தான்தினோ அப்புகாமி .. | 0 | 0 | 20·2 |
| 3 | ஷை .. | ஷை .. .. | ஷை .. .. | 2 | 0 | 3·2 |
| 4 | ஷை .. | ஒரு தென்னைமரம்உள்ளது .. | ஷை .. .. | 0 | 0 | 1·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம்நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஹு டிசம்பர்மீ 21 ந் தேதியிலன்று 10·30 மணிக்கு இந்தக்கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடன்மைகளினது தன்மையையும் அவ்வுடன்மைகளுககாய்த் தாம் சாதிககும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1918 ம் ஹு நவம்பர்மீ 22 ந் உ.

ஜே. ஜி. பிறேசர்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கெஹற்கொடையிலிருக்கும் வாடிவீட்டு காவல்காரனுக்கு வீடுகட்டுகிறதற்காக என்னும் பகிரங்க தேவைககு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 16,860. குறிச்சி—கம்பக.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கெஹற்கோஅலககவத்த .. | தென்னையும் மற்றும் மரங்களும் இடுகு கட்டிடமும்உள்ளதோட்டம் .. | டபுள்யு. டி. சேமிஸ் அப்பு .. | 0 | 1 | 36·22 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால். அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஹு டிசம்பர்மாசம் 21 ந் தேதியிலன்று 10·45 மணிக்கு இந்தக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடன்மைகளினது தன்மையையும் அவ்வுடன்மைகளுக்காய்த் தாம்சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1918 ம் ஹு நவம்பர்மீ 23 ந் உ.

ஜே. ஜி. பிறேசர்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மொறட்டுவாவிலிருக்கும் லக்சபற்றியாவிலிருக்கும் கூலி லையின்களுடைய எல்லையை அகலிக்கிறவும் சுரங்கத்தை பெருப்பிக்கிறவும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 16,854. குறிச்சி—லக்சபற்றிய.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | கிற்றகெலககவத்த .. | 16 தென்னைமரங்களுள்ளது .. | எம். சி. பெர்னாண்டோவும் எம். எல். மென்டிசும் சே. எம் டி மெல்லும் .. | 0 1 4·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தின் 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ௵ டிசம்பர்மாசம் 21 ந் தேதியிலன்று 11.30 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1918 ம் ௵ நவம்பர்௴ 23 ௳.

ஜே. ஜி. பிறேசர்
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இல. 7,063, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1918 ம் ௵ (நொவம்பர்) கார்த்திகை௴ 29 ந் தேதி தவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம் 1899 ம் 1900 ம் 1903 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் என். ஏ. கம்றன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியைமுடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

என். ஏ. கம்றன்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாகல் டிஸ்திறிக் தம்பதேனி காற்பத்தைச்சேர்ந்த உடுக்காக்கோறளை கிழக்கில் பம்பேதேனிய என்னும் கிராமத்திலுள்ள இத்துடனணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே 31 பேர்ச் விசாலமுடையதும் 460 ம் பிரதமபடத்தில் 11½ ம் காணித்துண்டாய்க் காட்டப்படுவதும், சாமானியமாய் எல (தோட்டம்) என்னும் பெயரினால் அறியப்பட்டு அல்லது அழைக்கப்பட்டு வருவதுமான காணித்துண்டு. இதறகெல்லைகளாவன: வடக்கு-மெதகம்பொலக் கிராம எல்லை; கிழக்கும், தெற்கும் வல்தேனியக் கிராம எல்லை; மேற்கு-மதகம்பொல கோவில் சொர்தக்காரர் உரித்தாடும் பின்கும்புற, உன்காவும் மறுபேரும் உரித்தாடும் மல்மீயகும்புற, அப்புகாமியும் மறுபேரும் உரித்தாடும் மல்மீயகும்புற, கேவாலகே பண்டியாவும் மறுபேரும் உரித்தாடும் தல்கஸ்பொலகும்புற, அப்புகாமியும் மறுபேரும் உரித்தாடும் அம்பலமகாவகும்புற, சிரிமல்காமி உரித்தாடும் மல்காகும்புற. உக்குவாவும் மறுபேரும் உரித்தாடும் பீலகாவகும்புற, ஈம்துவ உரித்தாடும் பீலகாவகும்புற, கிரிஉக்குவாவும் மறுபேரும் உரித்தாடும் வல்லியசதகும்புற, அப்புகாமியும் மறுபேரும் உரித்தாடும் மடகும்புற, பண்டிறாலவும் மறுபேரும் உரித்தாடும் மதகும்புற, சின்அப்பு உரித்தாடும் தும்மிட்டல்லாவகும்புற.

*இங்கிலீசின் மூன்றாம் பாகம் 2233 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[குருநாக்கல் வி. உ. 122—1918.]

---

## சவுக்கிய சீர்திருத்தச் சங்கத்துக்கு தொழிலுக்குட்படாத அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தல்.

1898 ம் ஆண்டு 13 ம் நம்பர் ஸ்தான சங்கச் சட்டத்தின் 12 ம் பிரிவின்படி புத்தளப் பட்டணத்தின் சௌக்கிய திருத்தச் சங்கத்துக்கு 1919–1920 ம் ஆண்டுகளுக்கு உத்தியோகஸ்தரல்லாத மூன்று அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யும் பொருட்டு 1918 ம் ஆண்டு மார்கழிமாதம் 12 ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு புத்தளம் கச்சேரியில் ஒரு கூட்டம் வைக்கப்படுமென்று இத்தா லறிவிக்கப்படுகின்றது.

அங்கத்தவர்களைத் தெரிந்துகொள்ளப் பிரியங்கொடுப்போர்கள் அக்கூட்டத்தில் வந்து காணப்படவேண்டும். இதைத் தவிர புறியங்கொடுத்தனுப்பப்படும் தத்துவக் கடிதாசிகளைப் பாரமெடுக்கப்படமாட்டாது.

சீ. ஆர். கம்பர்லாண்ட்,
அரசாட்சி யேசன்றுத் துரையவர்கள்.

குருநாக்கல் கச்சேரியில்,
1918 ம் ஆண்டு கார்த்திகை௴ 23 ந் திகதி.

## தொழிலுக்குட்படாதவரின் அறிவித்தல்.

இன்றையிலிருந்து மூன்று மாதத்திற்கு பின் தக்குறு அனுத்கூர் கோறளை ராகம்பத்துவ கம்பா மெதகமயில் லிருக்கும் தொன் சேமிஸ் சயவருதன வாகிய நான் 1907 ம் ஆண்டின் 1 வது ஆடினன்ஸ் 8 வது பிரிவின்படி பதிவுகாரியகர்த்தர் அவர்களுக்கு என்னை குருநாகல் டிஸ்திறிக்கில் சிஙகளப்பாஷையில் நொத்தாரிஸ் வேலைபார்க்க விடும்படி விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருககின்றேன் என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

டி. சே. சயவர்தன.

கம்பா மெதகம,
1918 ம் ௵ நவம்பர்மீ 2 ㄴ தேதி.

---

களுத்துறை டிஸ்திறிக்கு பஸ்டும் கோறளை மஹபத்துவை அகலவத்தை தற்கால இடத்திலிருக்கும் ஹேலம்பகே டொன் கிருலஸ் வாகிய நான் 1907 ம் ஆண்டு 1 ம் கட்டளைச் சட்டத்தின் 1B செடுயிலில் 2 ம் பிரிவின்படி இன்று தவர்க்கும் மூன்று மாசத்துக்குப்பின்களம் றெஜிஸ்திரூர் ஜெனரூல் அவர்களிடம் காலி டிஸ்திறிக்கு சிங்களம் நொத்தாரிஸ் வேலை செய்வதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டிருப்பதை இதனுல் அறிவித்தல் கொடுககிறேன்.

எச். டி. கிருலஸ்.

அகலவத்தை,
1918 ம் ௵ நவம்பர்மீ 11 ㄴ உ.

---

அன்வெல்லை தற்காலம் இருக்கும் கங்கொடைஅலிலை அப்புகாமிலாகே ஜெருமானிஸ் பெரேரா ஆகிய நான் 1907 ம் ஆண்டின் 1 ம் இலக்க கட்டளைச்சட்டப்படி 1 B அட்டவணையின் 2 ம் பிரமாணத்தின் பிரகாரம் காலி டிஸ்திறிக்கில் சிங்களபாஷையில் நொத்தாரிஸ உத்தியோகம் நடத்த பதிவுகாரியகத்தர் அவர்களுக்கு இதற்கு மூன்றுமாதங்களின்பின் மனுப்பண்ண எண்ணி இருககிறேன் என்பதை இத்தல் அறிவிக்கிறேன்.

ஜீ. ஏ. ஆர். பிரேரா.

கங்வெல்ல,
1918 ம் ௵ கார்த்திகைமீ 21 ㄴ திகதி.

---

## அரசாட்சி அறிவித்தல்.

1901 ம் ஆண்டு 2 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் D என்னும் எழுத்து இருக்கும் லய்ஸ்தில் 8 ம் பிரிவின் 4 ம் கண்டத்தின் பிரகாரம் இதின்கீழ் காண்கிற இடத்தில் இரட்டினபுரி லோகல்போட் எல்லைக்குள் மனிதர் குளிக்கும்தலம்.

உள் ரவுண் ரோட்டில் கசுகஸ்வத்தையி லிருக்கும் சிமெந்தியால் கட்டப்பட்ட கிணத்திலும் பீல்லயிலும் மனிதர் குளிக்கும் தலம்.

இரத்தினபுரி லோக்கல்போட் கந்தோரில்,
1918 ம் ஆண்டு நொவம்பர்மீ 22 ㄴ திகதி.

பி. கொன்ஸ்ரன்ரைன்,
செயார்மன்.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.